[25th March 1965

தூரம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, ஏமாற்றுகின்ற முறையில் இந்த முந்திரிச் செடி பயிரிடப்படுகிறது என்பது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அபிப்பிராயம் அப்படி இருக்கலாம். அப்படி ஒன்றும் ஏமாற்றவில்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : முந்திரி பஞ்சப் பயிர் மழை இல்லாத பகுதிகளில் போடப்பட வேண்டியது. நல்ல வளமுள்ள மண் இருக்கும் பகுதிகளிலும் இதைப் பயிரிடுவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆகவே எங்கு மழை இல்லாத பகுதி இருக்கிறதோ அங்கே மட்டும் இந்த முந்திரியைப் பயிரிடுவதற்குச் சலுகைகள் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கு பஞ்சம் இருக்கிறதோ அங்கு இதைப் பயிரிட வேண்டுமென்பதில்லை. இந்த முந்திரிச் செடிக்குச் சாதகமான நிலைமை எங்கு இருக்கிறதோ அங்குதான் இது பயிரிடப்படுகிறது. கிழக்கு இராமநாதபுரம் கஷ்டத்தில் இருக்கும் பகுதி. அங்கே பத்தாயிரம் ஏக்கரில் முந்திரி சாகுபடிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : முந்திரிச் செடி நட்டு எத்தனை ஆண்டுகளில் பலன் கிடைக்கும்?

கனம் திரு. பூ. கக்கன் : ஆறு வருஷங்களுக்குப் பிறகுதான் கடனைக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, பலன் கொடுக்க ஆறு ஆண்டுகள் ஆகும் என்று நினைக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சாவூர் முந்திரிப் பருப்பு நல்ல பருப்பு என்று சொல்வார்கள். தஞ்சையிலிருந்து புதுக்கோட்டை வரையில் அந்தப் பிரதேசத்தில் நல்ல முறையில் முந்திரி சாகுபடி செய்திருக்கிறார்கள். அந்தப் பிரதேசத்தில் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சை ஜில்லாவிலே உள்ளவர்கள் உண்மையிலேயே முந்திரிச் செடி வளர்ப்பதிலே ஆர்வம் காட்டி வருகிறார்கள். கனம் அங்கத்தினர் சொன்ன பகுதியை அரசாங்கம் கவனித்து வருகிறது. அங்குள்ள விவசாயிகள் விண்ணப்பித்துக் கொண்டால் தகுந்த உதவி செய்ய முடியும்.

Distribution of cashew seeds

* 327 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of cashew seeds distributed during 1963-64 under the Free Distribution Scheme?

25th March 1965]

THE HON. SRI P. KAKKAN : Cashew seeds are not issued free of cost under the Cashew Development Scheme or any cther scheme in this State.

முந்திரி வளர்ப்புத் திட்டத்தின் கீழோ வேறு பிற திட்டத்தின் கீழோ இம்மாநிலத்தில் முந்திரி விதைகள் இலவசமாக வழங்கப்படுவதில்லை.

Loans to Panchayats for construction of wells.

* 328 *Q.*—SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Panchayats to which loans were sanctioned for the construction of wells for irrigating green manure during 1963–64?

THE HON. SRI P. KAKKAN : Ten Panchayats.

பத்து பஞ்சாயத்துக்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இந்தப் பசுந்தாள் உரத்திற்காக அரசாங்கம் கடனைக் கொடுத்ததில் எவ்வளவு பணம் செலவு செய்யப்பட்டிருக்கிறது? அதனால் லாபம் ஏற்பட்டிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்ற தகவல் இல்லை. முதலில் 10 இடங்களில் கிணறுகள் வெட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இரண்டாவது எட்டு இடங்களில் வெட்ட உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநில விவசாய இலாகாவில் இருந்து 11 இடங்களுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது கொடுக்கப்படும்.

குலசேகரன் பட்டினத்தை சிறு துறைமுகமாக அபிவிருத்தி செய்தல்

* 329 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குலசேகரன் பட்டினத்தை சிறிய துறைமுகமாக அபிவிருத்தி செய்ய திட்டமிருக்கிறதா?

கனம் திரு. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : ஆம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் குலசேகரன் பட்டினம் துறைமுகத்தை அபிவிபிருத்தி செய்யும் திட்டங்கள் ஆலோசனையில் உள்ளன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், இந்தத் துறைமுகத்தில் என்ன விதமான அபிவிருத்திகளைச் செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்ற விவரத்தை அறியலாமா?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, the State Working Group on Minor Ports has suggested the following improvements to the Port during the Fourth Plan :—

(1) Hydrographic survey of the Port;

(2) Laying of mooring buoys for mooring sailing vessels;